18.06.2024

**<u>கூடுதல் அமர்வு நீதிமன்றம்(விரைவு நீதிமன்றம்) விழுப்புரம்.</u>**

**<u>அமர்வு வழக்கு எண். 257/2014</u>**

அ.சா. 8

| | | | |
|---|---|---|---|
| பெயர் | குமார் | | |
| த/பெ | சுப்புராயன் | | |
| **கிராமம்** | சோரப்பட்டு | **தொழில்** | |
| **தாலுக்கா** | மண்ணாடிப்பட்டு | **வயது** | 47/2024 |
| மாநிலம் | புதுவை | **தேதி** | |

**இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.**

**<u>முதல் விசாரணை</u>**

**நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போது** தனியார் நிறுவனத்தில் ஆப்பரேட்டராக சென்னையில் பணி செய்து வருகிறேன். இந்த வழக்கில் இறந்துபோன பாலையா எங்கள் ஊரை சேர்ந்தவர். அவர் இறந்து விட்டார். சுமார் 15 வருடங்களுக்கு முன்பு அவர் கொலை செய்யப்பட்டு இறந்து விட்டார். கேள்விபட்டு நான் சம்பவ இடமான இ ஆண்டிப்பாளையம் பூரணசந்திரன் கரும்பு தோட்டத்திற்கு அருகில் சம்பவத்திற்கு மறுநாள் பார்க்க சென்ற போது 10.09.2009ம் தேதி காலை சுமார் 5.30 மணியளவில் சென்று விட்டு சுமார் 6 மணியளவில் கண்டமங்கலம் காவல் நிலைய ஆய்வாளர் அவர்கள் சம்பவ இடத்தை பார்த்து பார்வை மகசர் தயார் செய்தார்கள், அங்கு இருந்த ரத்தம் தோய்ந்த மண், இரத்தம் படாத மண் ஆகியவற்றை 7 மணிக்கு எடுத்து பொட்டலமாக கட்டி கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினார்கள். மேலும் 7.30 மணியளவில் 2 நோக்கியா செல்போன்களை அங்கிருந்து எடுத்து மகசரில் கைப்பற்றினார்கள். என்னுடன் பாலகிருஷ்ணன் என்பவர் உடனிருந்து மேற்சொன்னவைகளில் கையொப்பம் இட்டோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 1ம் கையெழுத்து என்னுடையது ஆகும். அந்த பார்வை மகசர் அ.சா.ஆ.2 ஆகும். இரத்தம் தோய்ந்த மண் ஆகியவற்றை கைப்பற்றிய கைப்பற்றுதல் மகசரில்

உள்ள 1ம் கையெழுத்து என்னுடையது ஆகும். அந்த கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.3 ஆகும். செல்போன்களை கைப்பற்றிய கைப்பற்றுதல் மகசரில் உள்ள 1ம் கையெழுத்து என்னுடையது ஆகும். அந்த கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.4 ஆகும். எனக்கு சான்றுப் பொருட்களை பார்த்தால் அடையாளம் சொல்ல முடியும். சாட்சி அவைகளை சரியாக அடையாளம் காட்டினார். இரத்தம் தோய்ந்த மண் பொட்டலம் சா.பொ.1 ஆகும். இரத்தம் தோயாத சாதாரண மண் பொட்டலம் சா.பொ.2 ஆகும். செல்போன்கள் 2 எண்ணிக்கை முறையே சா.பொ.3 மற்றும் 4 ஆகும். இது சம்மந்தமாக என்னை போலீசார் விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் சொசைட்டியில் வேலை செய்து வருகிறேன். நான் சோரப்பட்டு கிராமத்தில் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தில் மேலாளராக பணி செய்து வருகிறேன். பாலையா எப்போது இறந்தார் என்றும், நான் எப்போது கேள்விப்பட்டேன் என்றும் கேட்டால் எனக்கு தெரியாது. போலீசார் என்னை இந்த வழக்கில் கையெழுத்து மட்டும் கேட்டார்கள் விசாரிக்கவில்லை. நான் கையெழுத்தை எங்கு வைத்து போட்டேன் என்று ஞாபகமில்லை. என் முன்னால் சான்று பொருட்கள் கைப்பற்றப்படவில்லை. ஏற்கனவே தயார் செய்து வைத்திருந்த ஆவணங்களில் கையெழுத்து போட்டேன். எப்போது சான்று பொருட்களை கைப்பற்றினார்கள் என்று எனக்கு தெரியாது. நான் போலீசார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க காவல் நிலையத்தில் வைத்து ஆவணங்களில் கையெழுத்து போட்டேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை.,</u>**